**கவனிக்க.-** *2014.08.29 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1879 - 2014 සැප්තැම්බර් මස 05 වැනි සිකුරාදා - 2014.09.05

*1879 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1406 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1407 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1407 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1408 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 1413 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** நகர சபைகள் (திருத்தச்) சட்டமூலம் 2014, ஒகத்து *1* ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

Procurement of 1,300 Nos. Tyres for Carriage & Wagon Wheels (3" - 0" Dia.) B. G. Including Chinese 4 Wheel Wagons

Procurement No. : SRS/F. 7131

இலங்கைப் புகையிரத சேவைகளுக்கு 1,300 எண்ணிக்கையுள்ள ரயர்களை (For Carriage & Wagon Wheels (3'-0' DIA) B. G. Including Chinese 4 Wheel Wagons) உற்பத்தியாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை, கொழும்பு 10, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, 1 ஆம் இலக்கத்திலுள்ள போக்குவரத்து அமைச்சு, அமைச்சு பெறுகைக் குழுவின் தவிசாளர் பெற்றுக்கொள்வார். உற்பத்தியாளர்களினால் அற்றோணித் தத்துவம் வழங்கப்பட்ட தராதர அங்கீகாரமுள்ள முகவரொருவரின் மூலமாக அவர்களின் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

2. விலைமனுக்கள் 2014, செத்தெம்பர் 19 ஆந் திகதி இலங்கை நேரப்படி பி. ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

3. இலங்கை பணத்தில் பத்தாயிரம் ரூபாவைச் (10,000 ரூபா) செலுத்திய பின்னர் 2014.08.09 ஆந் திகதியிலிருந்து 2014.09.18 ஆந் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் மு. ப. 9.00 மணிக்கும் பி. ப. 3 மணிக்கும் இடையில் இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய விலைமனு ஆவணத்தினுடனான படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வெளிநாட்டு விலைமனுதாரர்கள் திட்டவட்டமாக குறிக்கப்பட்ட நாட்களில் இலங்கைப் பணம் பத்தாயிரம் ரூபாவிற்கு (10,000 ரூபா) வெளிநாட்டுப் பணத்தில் இலகுவில் மாற்றக்கூடிய சமமான தொகையை அவர்களின் நாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலயங்களில் செலுத்திய பின்னர், இலங்கையிலுள்ள தூதுவராலயத்தின் ஊடாக இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரை விலைமனு ஆவணங்களை வழங்கும்படி கோரிக்கையொன்றைச் சமர்ப்பிக்கலாம். மேலே குறிப்பிட்டுள்ள இலங்கைப் பணத்திலான பத்தாயிரம் ரூபாவானது (10,000 ரூபா) அல்லது இலகுவில் மாற்றக்கூடிய வெளிநாட்டு நிகரான பணமானது மீளளிக்கப்படாததொன்றாகும்.

4. விலைமனுக்கள் அவைகளை இலங்கை, கொழும்பு 10, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, 1 ஆம் இலக்கத்திலுள்ள போக்குவரத்து அமைச்சில் மூடியவுடன் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும்போது விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அத்தாட்சிபெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம். அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம் :-

தவிசாளர்,
அமைச்சுப் பெறுகைக் குழு,
போக்குவரத்து அமைச்சு,
இல. 1, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

6. விலைமனு ஆவணங்களை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும் :

புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலை திணைக்களம்.
த. பெ. 1347, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு,
இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2473328
தொலைநகல் : 94(11)2432044
மின் - அஞ்சல் : srs.slr@gmail.com
gmrslr@sltnet.lk
இணையத்தளம் : www.railway.gov.lk

தவிசாளர்,
அமைச்சுப் பெறுகைக் குழு,
போக்குவரத்து அமைச்சு.

தொடர்பிலக்கம் SRS/F.7131

9-50

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## நீதிமன்ற கட்டிடத்திலிருந்து கழற்றப்பட்ட இரும்பு வளை ஏல விற்பனை

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றின் பழைய கட்டிடத்திலிருந்து கழற்றப்பட்ட இரும்பு வளைகள் (றஸ்க்) ஒரு தொகை 2014.09.25 ஆந் திகதியன்று மு. ப. 9.00 மணி முதல் பிற்பகல் 12.30 மணிவரை இந்நீதிமன்ற வளவில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. பொது மக்கள் எவரும் இந்நீதிமன்ற பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட பொருட்களை ஏலவிற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

2. இப்பொருட்களில் எவற்றையேனும் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் விற்பனையிலிருந்து மீளப்பெறுவதற்கு இந்நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு.

3. பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தைச் செலுத்தி உரிய பொருட்களை நீதிமன்ற வளவிலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும். சகல கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்துதல் வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. பொருட்களை விலை வைத்து வாங்குவோர் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

ஜனாப் என். எம். அப்துல்லா,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
மட்டக்களப்பு.
2014, யூலை 25.

9-5

# ஆய விற்பனையும் குத்தகையும்

## திவுலபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2015

2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள திவுலப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் கள்ளுத்தவறணைகளில் பதப்படுத்தப்பட்ட கள்ளை சில்லறை விலைக்கு விற்பனை செய்யும் பூரண அதிகாரத்தைக் கொள்வனவு செய்வதற்காக 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள விற்பனை நிபந்தனைகளுக்கும் கீழ்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்ட வகையில் 2014.09.26 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கள்ளு குத்தகையைப் பெற்றுக்கொள்ள முன்வருவோர் உரிய கேள்விப்பத்திரப் படிவமொன்றை முறையாக நிரப்பி கீழே காட்டப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைப் பட்டியலில் விதிக்கப்பட்டுள்ள விலைமனுப் பணத்தைக் கொடுப்பனவு செய்து பெற்றுக்கொள்ளப்படும் பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டொன்றையும், பிரகடனப்படுத்தப்பட்ட குத்தகை நிபந்தனைகளுக்கமைய பெறப்பட்ட சொத்துச் சான்றிதழொன்றையும் உள்ளடக்கியதாக இலச்சினை பொறிக்கப்பட்ட கடித உறையொன்றில் இட்டு அதன் இடப்புற மேல் மூலையில் தம்மால் விலைமனுச் செய்யப்படுகின்ற தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதி ஒவ்வொரு தவறணைக்குமென இங்கே காட்டப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் பதிவுத்தபாலின் மூலம் அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலம் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்குக் கிடைக்கச்செய்ய முடியும்.

3. கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்பவர் கேள்விப்பத்திரத்தை நிரப்புகையில் கேள்விப்பத்திரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு திருத்தத்தையும் தமது கையொப்பத்தின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதித் தினமான 2014.09.26 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விப்பத்திரதாரர்களும் பிரதேச செயலகத்திற்கு வருகை தரல் வேண்டும்.

5. எவ்வித தகவல்களையும் உள்ளடக்காத கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் உரிமை திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்கு உண்டு.

6. மேற்குறித்த தினத்தில் விற்பனை செய்ய முடியாமல் போகின்ற கள்ளுத் தவறணையின் மீள் விற்பனை 2014.11.18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மேற்கொள்ளப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தலும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக அமைந்திருத்தல் வேண்டும்.

7. இக்குத்தகையைக் கொள்வனவு செய்பவர் தொடர்பாக பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னர், அவ்வாறு பிரகடனம் செய்யப்பட்ட தினத்தன்று அதாவது குத்தகை விற்பனைத் தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்னர் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற நிதியில் இரண்டு மாதங்களுக்கான குத்தகைப் பணத்தினைவிட அதிகமான ஒரு தொகையை பிணையாகச் செலுத்தி தவறணை தொடர்பான நிபந்தனைகளுக்குக் கைச்சாத்திடல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கின்றபோது அறிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களிருப்பின், அவற்றை திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

எச். எம். எல். எஸ். ஹேரத்,
பிரதேச செயலாளர்,
திவுலப்பிட்டிய.

பிரதேச செயலகம்,
திவுலப்பிட்டிய,
2014.08.14.

**அட்டவணை**

| இலக்கம் | தவறணையின் இலக்கமும் பெயரும் | பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்வி வைப்புப் பணம் ரூபா | கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 27 - தாகொண்ண | திவுலப்பிட்டிய | தாகொண்ண | முற்பகல் 11.00 பிற்பகல் 5.00 | பிற்பகல் 2.00 பிற்பகல் 8.00 | 4,000 | 2014.09.26 முற்பகல் 10.30 |

9-20

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

முன்னர் அவுஸ்திரேலியா, விக்டோரியா 3169, க்ளேடன் தெற்கு , க்ளியரி கோர்ட், இல. 34 இல் வசித்த தற்போது அவுஸ்திரேலியா, விக்டோரியா 3178, ரோவில், விக்டோரியா நொக்ஸ் அவெனியூ, இல. 48 இல் வசிக்கும் மானெல் லக்ஷ்மி வீரகோன் (தே. அ. அ. இல. 555652690V) ஆகிய நான் பிலியந்தலை, போகுந்தர, பிலியந்தலை றோட், இல. 192 இல் வசிக்கும் திருமதி நாமல் ரேணுகா வீரகோன் என்பவரை எனது அற்றோணியாக நியமித்து விக்டோரியா சொலிஸிட்டர் விமல் ஜயகொடி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1995, ஒற்றோபர் 26 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணி தத்துவத்தை 2014, ஓகத்து 10 ஆந் திகதியிலிருந்து இரத்துச்செய்து வலுவிழக்கச் செய்ததாக பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன். மேற்கூறப்பட்ட அற்றோணி தத்துவத்தின் பேரில் இது தொடக்கம் மேற்கூறப்பட்ட அற்றோணி அதிகாரியால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கோ அல்லது நடவடிக்கைக்கோ நான் பொறுப்பல்ல என மேலும் கூறுகின்றேன்.

மானெல் லக்ஷ்மி வீரகோன்.

9-15

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருவது யாதெனில், முன்னர் தெஹிவளை, அல்பேட் பிளேஸ், இலக்கம் 34-2/1 ஐ வசிப்பிடமாகவும் தற்போது பொரெலெஸ்கமுவ, ஜனதா மாவத்தை, இலக்கம் 301/1 ஐ வசிப்பிடமாகக் கொண்ட விது விரேன் ஜெயவர்தனா ஆகிய நான், தெஹிவளை, அல்பேட் பிளேஸ், இலக்கம் 34-2/1 ஐ வசிப்பிடமாகவும் தற்போது பொரெலெஸ்கமுவ, ஜனதா மாவத்தை, இலக்கம் 301/1 ஐ வசிப்பிடமாகக் கொண்ட ஜனித் ரமிண்து ஜெயவர்தனா அவர்களுக்கு என்னால் வழங்கப்பட்டதும், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எப். எம். ஃபைசால் அவர்களால் 767 ஆம் இலக்கத்தைக் கொண்டதும் 2013.07.03 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் அற்றோணி தத்துவப் பதிவேடு தொகுதி 122, இரு மாடி 77, 4033 ஆம் இலக்கத்தைக் கொண்ட நாளேட்டில் 2013.07.04 ஆந் திகதி பதியப்பட்டதுமான குறித்த அற்றோணி தத்துவமானது 2014.08.12 ஆந் திகதியில் இருந்து இரத்துச்செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகிறது.

இனிமேல் குறித்த ஜனித ரமிண்து ஜெயவர்தனா அவர்களால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களுக்கு நான் பொறுப்பல்ல என்று இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

விது விரேன் ஜெயவர்தனா.

9-135

---

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் பற்றி இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் முன்னைய பெயர் : சென் ஏ டி எம் (பிறைவேட்) லிமிடெட்
கம்பனியின் புதிய பெயர் : இன்டர்கொம்ஸ் ஏசியா (பிறைவேட்) லிமிடெட்
கம்பனி இலக்கம் : பீவீ 87197
பதிவு முகவரி : இல. 47, அலெக்சான்ரா பிளேஸ், கொழும்பு 7
பெயர் மாற்றப்பட்ட திகதி : 2014.01.16

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

9-36

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு 2, லேக் கிரசன்ட், இல. 57 இல் வசிக்கும் திஸ்ஸவீர ஸ்ரீயான் ஜினசேன (தே. அ. அ. இல. 482563074V உரிமையாளர்) மற்றும் கொழும்பு 5, லெயார்ட்ஸ் றோட், இல. 80ஏ இல் வசிக்கும் கொன்ராட் வோர்னர் மாரி திரீஸ் பிரின்ஜியர்ஸ் (பெல்ஜியம் கடவுச்சீட்டு இல. ஈஜீ 057185 உரிமையாளர்) ஆகிய ஜா-எல, ஏக்கல, மினுவங்கொடை றோட், "ரீஜன்ஸ் கோர்ட்", இல. 218 என்ற முகவரியில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள பீவீ 75003 ஆம் இலக்கத்தின்கீழ் மற்றும் ஓசீ 108 ஆம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்ட சொலிடீல் டிரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட் கம்பனியின் பணிப்பாளர்கள் என்ற முறையில் நாவல, நுவரவத்த ப்ளேஸ், இல. 15/8 ஆம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ரிசர்ட் அனஸ்லி ஈபெல் (தே. அ. அ. இல. 542051337V உரிமையாளர்) மற்றும் ராகம, பொல்கஹஹேன றோட், இல. 261/11 இல் வசிக்கும் திரு. அபேகோன் முதியான்சேலாகே சந்திரா கீர்த்தி சிரிமெவன் பண்டார (தே. அ. அ. இல. 661840498V உரிமையாளர்) அவர்களை மேற்கூறப்பட்ட சொலிடீல் ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்டின் அற்றோணித் தத்துவக்காரர்களாக நியமனஞ்செய்த பிரசித்த நொத்தாரிசு சேனக டி சில்வா (கே. எஸ். பீ. டி சில்வா) அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 7 ஆந் திகதி பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் 1129 ஆம் இலக்க தினப்புத்தகத்தின்கீழ் அற்றோணித் தத்துவப் புத்தகத்தில் 45 ஆம் பிரிவின்கீழ் 134 ஆம் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்ட 2615 ஆம் இலக்க 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதியிடப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தை 2014, யூலை 31 ஆந் திகதி முதல் இரத்துச்செய்து செயலிழக்கச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றோம்.

பணிப்பாளர்கள்.

8-124

---

## வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் கூட்டிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்

டி பி எல் யுனிவர்ஸ் குளோவ்ஸ் லிமிட்டெட் என்ற கம்பனி 2014, ஓகத்து 14 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது என்ற விபரம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : டி பி எல் யுனிவர்ஸ் குளோவ்ஸ் லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீபி 5210
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2014, ஓகத்து 14

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2014, ஓகத்து 22.

9-156

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஷெலீனா ஈ-கொமர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 99600
கூட்டிணைப்புத் திகதி : 2014.07.09
பதிவு முகவரி : லெவல் 26, கிழக்கு மாடம், எச்சலின் சதுக்கம், கொழும்பு 1

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

9-57

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் ஐ எஸ் சி லொஜிஸ்டிக்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் அதன் பெயரை மெக் புறொஜெக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என சட்டப்பிரிவு 8 இன்கீழ் 2014.07.09 ஆந் திகதி முதல் மாற்றிக் கொண்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பழைய பெயர் : ஐ எஸ் சி லொஜிஸ்டிக்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 69130
பதிவு முகவரி : த வேவ்ட்ரீ, இலக்கம் 141/9, வொக்ஷோல் வீதி, கொழும்பு 2
கம்பனியின் புதிய பெயர் : மெக் புறொஜெக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

மெக் புறொஜெக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

9-58

---

## கம்பனியின் பெயர் மாற்றம் குறித்தான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் 2014.08.07 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும்படியாக கம்பனியின் பெயர் மாற்றம் பற்றி இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பழைய பெயர் : புளூ கொண்டினன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 16941
அலுவலக முகவரி : இல. 14, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 4

*கம்பனியின் புதிய பெயர்* : அனந்தய பாசிக்குடா (பிறைவேட்) லிமிட்டெட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சட்டத்தரணி கீர்த்தி பத்திராஜ,
கம்பனிச் செயலாளர்.

9-59

---

## கூட்டிணைப்பிற்கான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : பவரியன் ஒட்டோ சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 99419
*கூட்டிணைப்புத் திகதி* : 2014, யூலை 1
*பதிவு முகவரி* : இல. 35ஏ, மயான வீதி, தளபத்பிட்டிய, நுகேகொடை

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

9-64

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : கே எஸ் டைடி என்டர்பிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 85047
*பதிவு முகவரி* : 5 ஆம் லேன், நுவரவெவ வத்த, மிஹிந்தலை வீதி, அநுராதபுரம்

9-140

---

## கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : லங்கா ஸ்டொக் கனெக்ட் (பீவீரீ) எல்ரீடி
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 81919
*கூட்டிணைப்புத் திகதி* : 2011, ஒற்றோபர் 19
*பதிவு முகவரி* : அவுஸ்திரேலிய புலம்பெயர் கன்சல்ட்ரன்ட் மே./பா., தரை மாடி, சினமன் லேக் சைட், இல. 115, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 2

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

9-65

---

## கூட்டிணைப்பிற்கான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனிப் பெயர்* : ரன்சாய் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 99898
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2014, யூலை 24
*பதிவு முகவரி* : இல. 152/பி, பழைய அம்பதலே வீதி, முல்லேரியாவ வடக்கு, அங்கொட

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

9-66

---

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2014, யூன் 30 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் பின்வரும் கம்பனியின் (8 ஆம் பிரிவின் பிரகாரம்) பெயர் மாற்றம் தொடர்பாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*முன்னைய பெயர்* : ஈரோ ஏசியன் பிசினெஸ் எலயன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 82430
*முகவரி* : த பங்கள்ளோ, களுகளதன்ன எஸ்ட்டேட், அளதெனிய, ஹல்லகம, கண்டி
*புதிய பெயர்* : பிசினெஸ் இன்டெலிஜென்ஸ் சிஸ்ரெம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

9-67

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2014, யூன் 30 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் பின்வரும் கம்பனியின் (8 ஆம் பிரிவின் பிரகாரம்) பெயர் மாற்றம் தொடர்பாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*முன்னைய பெயர்* : பீயூ பிருடென்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 64738
*முகவரி* : இல. 526, ஹைலெவல் வீதி, தெல்கந்த, நுகேகொட
*புதிய பெயர்* : புன்சர கேப்ள்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

9-68

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : க்லோரியஸ் (Glorious) மெரின் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 99963
*கூட்டிணைப்புத் திகதி* : 30.07.2014
*பதிவு முகவரி* : இல. 15, விமலசார மாவத்தை, கொரகான, கெசல்வத்தை

நிறைவேற்று அதிகாரி.

9-123

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*நிறுவனத்தின் பெயர்* : ரன்மல் எயொட் மெரினா (பிறைவேட்) லிமிட்டெட்
*நிறுவனத்தின் வியாபார பதிவு இலக்கம்* : பீவீ 99635
*திகதி* : 2014.07.10
*பதிவு அலுவலகம்* : இல. 346/2, காலி வீதி, கொரகான, மொரட்டுவ

டிபீ கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

9-1

---

## அறிவித்தல்

வரையறுத்த தனியார் நிறுவனத்திலிருந்து பொதுக் கம்பனியாக மாற்றுதல்

பின்வரும் கம்பனி, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்கீழ் வரையறுத்த தனியார் நிறுவனம் என்ற நிலையிலிருந்து பொதுக்கம்பனியாக அந்தஸ்த்துக்கு மாற்றப் பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : யூனியன் எசுரன்ஸ் ஜெனரல் லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 99666
*கூட்டிணைப்புச் செய்யப்பட்ட திகதி* : 2014, யூலை 11
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 20, சாந்த மைக்கல் வீதி, கொழும்பு 3

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கீல்ஸ் கன்சல்டன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

9-56

---

## கம்பனியொன்றின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : கும்பல்கமுவ மினி ஹைட்ரோ (பீவீரீ) எல்ரீடி
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 100372
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.08.19
*கம்பனியின் பதிவு முகவரி* : 11 ஆம் மாடி, 'செத்சிரிபாய II ஆம் கட்டம்', பத்தரமுல்ல

கும்பல்கமுவ மினி ஹைட்ரோ (பீவீரீ) எல்ரீடி
என்ற கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்,

பி டபிள்யூ கோர்ப்பரேட் செக்ரட்டேரியல்
(பீவீரீ) எல்ரீடி,
கம்பனிச் செயலாளர்கள்.

2014, ஓகத்து 20.

9-152

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் முன்னைய பெயர்* : எடம் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 78150 பீபி
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. 264, கிராண்ட்பாஸ் றோட், கொழும்பு 14
*கம்பனியின் புதிய பெயர்* : எடம் இன்வெஸ்ட்மென்ட்ஸ் பீஎல்சீ

கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்,

எடம் இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டெட்,
பி டபிள்யூ கோர்ப்பரேட் செக்ரட்டேரியல் (பீவீரீ) எல்ரீடி,
கம்பனிச் செயலாளர்கள்.

9-182

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனியானது கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : நிஸ்ஸி இம்போர்ட்ஸ் அன்ட் எக்ஸ்போர்ட்ஸ் (பீவீரீ) எல்ரீடி
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 99403
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.07.01
*பதிவு அலுவலகம்* : இல. 87 1/2, ஹெம்ப்டென் லேன், கொழும்பு 6

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மெனேஜ்மென்ட் அன்ட் பிசினெஸ் அட்வைசரி சேர்விசெஸ் (பீவீரீ) எல்ரீடி-பீவீ 259,
கம்பனிச் செயலாளர்கள்.

9-178

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : சுறி ஏஜென்சி (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவிலக்கம்* : பீவீ 99494
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.07.04
*கம்பனி பதிவு முகவரி* : இல. 18சீ, பிரதிபிம்பாராம வீதி, களுபோவில, தெஹிவளை

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மெனேஜ்மென்ட் அன்ட் பிசினெஸ் அட்வைசரி சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்-பீவீ 259,
கம்பனிச் செயலாளர்கள்.

9-177

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, ஆரையம்பதி, பழைய கல்முனை வீதியைச் சேர்ந்த திருமதி குமுதினி குலேந்திரா ஆகிய என்னால் பழைய கல்முனை வீதி, ஆரையம்பதி 3 ஐச் சேர்ந்த மகாலிங்கசிவம் கிருஷ்ணபிரியா என்பவருக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு க. பரமானந்தம் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 7 ஆந் திகதிய 963 ஆம் இலக்க அற்றோணி தத்துவத்தை 2014, ஓகத்து 1 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருமாறு இரத்துச்செய்து இல்லாதொழித்திருப்பதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு இத்தால் அறியத்தருகிறேன். அத்துடன் சொல்லப்பட்ட மகாலிங்கசிவம் கிருஷ்ணபிரியா என் சார்பாக மேற்கொள்ளும் எந்தக் கொடுக்கல் வாங்கல்களையும் நான் பொறுப்பேற்க மாட்டேன்.

திருமதி குமுதினி குலேந்திரா.

9-162

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : லக்திரிய காந்தா பதனம
*பதிவிலக்கம்* : ஜீஏ 2867
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.10.13
*பதிவு முகவரி* : இல. 42, ஓல்ட் றோட், கொட்டாவ, பன்னிபிட்டிய

எஸ். எம். ஏ. கே. சமரகோன்,
சட்டத்தரணி, பொது நொத்தாரிசு மற்றும் சத்தியப்பிரமாண ஆணையாளர்,
நிறுவனச் செயலாளர்.

இல. 24ஏ, பெத்தியாகொட 2 ஆம் வீதி,
பியகம பாதை,
களனி.

9-205

**வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் கூட்டிணைப்பிற்கான அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

| கம்பனியின் பெயர் | கூட்டிணைப்பின் இலக்கம் | பதிவுசெய்யப் பட்ட அலுவலகம் |
|---|---|---|
| (1) இபிர் இன்டர்-நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 97085 | இல. 151, அஹமட் ஸ்குயா, நிந்தவூர் 25 |
| (2) ஆய் ஹோல்டிங் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 95451 | மீதொட்டமுல்ல, லேன், கொலன்னாவ |
| (3) மை வே டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 98799 | இல. 86, பருத்தித் துறை வீதி, யாழ்ப்பாணம் |

எம். சீ. எம். நவாஸ்,
கம்பனிச் செயலாளர்.

9-60

# ஏல விற்பனைகள்

**நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

வடமத்திய மாகாணம், பொலநறுவை மாவட்டத்தில் தமன்கடுவ பிரதேச செயலாளர் அதிகார பிரதேசத்துக்குள் புதிய நகரம், பொலநறுவை கிராமத்தில் அமைந்துள்ள "பட்டிய தமன முகலான" எனும் பெயருடைய நிலஅளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், அவரால் அங்கீகரிக்கப்பட்ட இல. எப். சீ. பீ. பீஓ. 160 (11 உள் படவரைபு) படவரைபுத்திட்டத்தில் காணித்துண்டு இல. 1023 எனக் குறித்துக்காட்டப்பட்டதுமான அனைத்து காணிப்பகுதி.

மேற்கூறப்பட்ட காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. பிரேமரத்னவால் தயாரிக்கப்பட்ட 2011.12.22 ஆந் திகதியிடப்பட்ட 11/164 ஆம் இலக்கமுடைய அண்மைக்கால படவரைபுக்கேற்ப கீழ்க்கண்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது :-

வடமத்திய மாகாணம், பொலநறுவை மாவட்டத்தில் தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவின் மெதபத்துவவில் புதிய நகரம், பொலநறுவை கிராமத்தில் அமைந்துள்ள "பட்டிய தமன" எனக் கூறப்படும் காணி சம்பந்தமாக (நிலஅளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட இல. எப். சீ. பீ. பீஓ. 160 படவரைபுத்திட்டத்தின் 1023 ஆம் இலக்க காணித்துண்டின் மீள் அளவையிடலாக உள்ளது) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. பிரேமரத்னவால் தயாரிக்கப்பட்ட 2011.12.22 ஆந் திகதியிடப்பட்ட 11/164 ஆம் இலக்கமுடைய பட வரைபுத்திட்டத்தில் காணித்துண்டு இல. 1 எனக் குறித்துக்காட்டப்பட்ட அனைத்து காணிப்பகுதி.

பரப்பளவு முப்பத்தொன்பது தசம் ஐந்து நான்கு பேர்ச் அல்லது 0.100 ஹெக்டெயர் (0ஏ. 0றூ. 39.54பே.)

மற்றும் அதில் உள்ள மரங்கள், கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் அதிலுள்ள ஏனைய அனைத்துடனும் சேர்ந்தது.

பிரசித்த நொத்தாரிசு ஆரியசேன கால்லகே அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இல. 2120 உடைய 2012, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறிக்கேற்ப இதில் மேற்படி அட்டவணையில் விபரமாகக் காட்டப்பட்டுள்ள உரிமைகள், ஆதனம் மற்றும் சுற்றாடல் ஆகியன கடப்பாடுடையவர்/ஈடுவைப்பாளர் ஆகிய லலித் விமலசேகரவால் கொழும்பு 2, யூனியன் பிளேஸ், இல. 242 இல் அமைந்துள்ள நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீயின் பெயருக்கு ஈடுவைத்து பிணையாக வைக்கப்பட்ட ஈட்டுமுறி மூலம் பெறப்பட்ட கூறப்பட்ட வசதிகளுக்காகக் கொடுக்கப்படவேண்டிய கொடுப்பனவை அவர் கைவிட்டுள்ளதால் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீயால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கேற்ப கூறப்பட்ட ஆதனத்தை 2014, செத்தெம்பர் 29 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு சம்பந்தப்பட்ட ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யவுள்ளோம்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி கதுறுவெல கிளையிலிருந்து புறப்பட்டு ஹபரண வீதி வழியாக சுமார் 100 மீற்றர்கள் சோ மில் சந்திவரை (மர அரிவாலை சந்தி) சென்று பின்னர் இடதுபக்கமாகப் புதிய நகரத்துக்குச் செல்லும் வீதிக்குத் திரும்பி புதிய நகர வீதி வழியாக சுமார் 3.5 கிலோ மீற்றர் தூரம் மாவட்ட நீதிமன்றம் வரை சென்று பின்னர் வலதுபக்கமாகத் திரும்பி டீ. ஏ. ஜீ. அலுவலக வீதிக்குத் திரும்பி 100 மீற்றர் சென்று இடதுபக்கமுள்ள 1 ஆவது கிளை வீதிக்குத் திரும்பி சுமார் 100 மீற்றர் சென்று சம்பந்தப்பட்ட ஆதனத்தை வந்தடையலாம். இந்த ஆதனம் வீதியின் இடதுகைப்பக்கம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு முறை.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் பின்வரும் பணத்தொகையினை ஏல விற்பனை யாளரிடம் செலுத்துதல் வேண்டும் :-

(1) முடிவுசெய்யப்பட்ட விற்பனை விலையின் பத்து (10%) சதவீதம் ;
(2) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2.5%) ;
(3) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள்வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;
(4) விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு அறவீடுகள் (100%) ;
(5) இலிகிதர், முரசறைவோர் கூலியாக 1,000 ரூபா ;
(6) நொத்தாரிசு கட்டணம் மற்றும் ஏனைய செலவுகள் 2,000 ரூபா.

விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி 90 வீதமும் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ இன் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்புகொண்டு பெற முடியும் :

சட்டப் பிரிவு, நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ, இல. 46/58, நவம் மாவத்தை, கொழும்பு 2, தொலைபேசி இல. 011-4218746.

திரிவன்கா மற்றும் சேனாநாயக்க,
ஏல விற்பனையாளர்கள்,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம்,
கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அரச மற்றும்
வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 182, 3 ஆம் மாடி,
ஹல்ஸ்றொப் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. 077-3181891.

9-166

---

**இலங்கை வங்கி**

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும்கீழ் விற்பனை அறிவித்தல்

கடன் பெறுநரின் பெயர் : திருவாளர்கள் பகதலே (பிறைவேட்) லிமிட்டெட்

ஈடுவைத்த ஆதனம் : கொள்ளுப்பிட்டிய, பகதல வீதி, இல. 562/17 இல் அமைந்த ஆதனம்

பணிப்பாளர்களின் பெயர்கள் : 1. திரு. எஸ். புஸ்பராசா
2. திரு. எஸ். திருவருள்

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2010.06.04 ஆந் திகதிய 1657 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2010.05.24 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினகரன்", "தினமின" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் ரீ அன்ட் எச் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் அவர்கள் 2014.10.11 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லைகளுள் பம்பலப்பிட்டிய வட்டாரம், இல. 38 இல் கொள்ளுப் பிட்டியவில் கீழ் பகதலே வீதியில் அமைந்த கொள்ளுப்பிட்டிய வீதி, வரிமதிப்பு இல. 562/17 ஐக் கொண்ட காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ராசப்பா தயாரித்த 2006, செத்தெம்பர் 1 ஆந் திகதியிட்ட வரைபட இலக்கம் 457/2006 இல் விபரித்த துண்டு 3ஏ என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு : தனியார் வீதியும் ; கிழக்கு : துண்டு 3பியும் ; தெற்கு : கீழ் பகதலே வீதியும் ; மேற்கு : கொள்ளுப்பிட்டிய வீதி, வரிமதிப்பு இலக்கம் 562/16ஏ ஐக் கொண்ட வரைபட இலக்கம் 56 இல் துண்டு 4 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இலக்கம் 457/2006 இன்படி எட்டு தசம் ஏழு ஆறு பேர்ச்சு (0ஏ. 0றூ. 8.76பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது கொழும்பு காணிப் பதிவகத்தில் ஏ/1038/228 இல் பதிவுசெய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட கொள்ளுப்பிட்டியவில் கீழ் பகதலே வீதியில் அமைந்த கொள்ளுப்பிட்டிய றோட், வரிமதிப்பு இல. 562/17 ஐக் கொண்ட காணி மேற்குறிப்பிட்ட வரைபட இலக்கம் 457/2006 இல் விபரித்த துண்டு 3பி என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணி- வடக்கு : தனியார் வீதியும் ; கிழக்கு : வரைபடம் இல. 56 இல் துண்டு 2, கொள்ளுப்பிட்டிய வீதி, வரிமதிப்பு இலக்கம் 562/18 உம் ; தெற்கு : கீழ் பகதலே வீதியும் ; மேற்கு : 3ஏயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இலக்கம் 457/2006 இன்படி எட்டு தசம் ஏழு ஆறு பேர்ச்சு (0ஏ. 0றூ. 8.76பே.) விஸ்தீரணமுடையது. இது கொழும்பு காணிப்பதிவகத்தில் ஏ/1038/229 இல் பதிவுசெய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) டீ. வெல்கொல்ல,
முகாமையாளர்,
அறவிடலும் கண்காணிப்பும்.

இலங்கை வங்கி,
தலைநகரக் கிளை,
இல. 61, ஆஸ்பத்திரி வீதி,
கொழும்பு 1,
2014, ஓகத்து 18.

9-175

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

***2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது***

**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**

**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

*1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.*

*2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன்* ***அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8*** *அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

*3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.*

*4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.*

***5. சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.*** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.*

***6. நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்*** *பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

***7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.***

*8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.*

*10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-*

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

*11.* **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

***12. ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.***

***13. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.***

***14. 2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-***

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

***எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.***

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2014**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 05.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.08.2014 |
| | | வெள்ளி | 12.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.08.2014 |
| | | வெள்ளி | 19.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.09.2014 |
| | | வெள்ளி | 26.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.09.2014 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 03.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.09.2014 |
| | | வெள்ளி | 10.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.09.2014 |
| | | வெள்ளி | 17.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.10.2014 |
| | | வெள்ளி | 24.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.10.2014 |
| | | வெள்ளி | 31.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.10.2014 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 07.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.10.2014 |
| | | வெள்ளி | 14.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.10.2014 |
| | | வெள்ளி | 21.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.11.2014 |
| | | வெள்ளி | 28.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.11.2014 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.